திருவள்ளூர் மாவட்டம் ஆவடி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட திருநின்றவூர் நகராட்சியில் பல்வேறு இடங்களில் நியாயவிலைக் கடைகள் புதிய சாலை அமைக்கும் பணிகளை தமிழ்நாடு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழும் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சாமு.நாசர் பணிகளை தொடங்கி வைத்து பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கினார். அருகில் நகர மன்ற தலைவர் உஷாராணி ரவி, நகராட்சி ஆணையர் ஜீவிதா, தலைமை செயற்குழு உறுப்பினர் நடு குத்தகை கே.ஜெ.ரமேஷ், நகரக் கழகச் செயலாளர் தி.வை. ரவி, நிர்வாகிகள் எஸ்.ஜெயபாலன், ஜி.விமல் வர்ஷன், கே.சுரேஷ்குமார், சரளாநாகராஜ், சி. கமலக்கண்ணன், உள்பட கழக நிர்வாகிகள் கவுன்சிலர்கள் வட்டக் கழகச் செயலாளர்கள் அரசு அதிகாரிகள் பலர் உள்ளனர்.

முதலமைச்சரோடு ஐந்தாண்டுகள் சட்டப்பேரவை உறுப்பினராகப் பணியாற்றியதில் பெருமை கொள்கிறோம்!

தமிழ்நாட்டின் முதல்வராக - தளபதி மீண்டும் வந்து அமருவார்!

சட்டப்பேரவையில் – காங்கிரஸ் கட்சி கு.செல்வப் பெருந்தகை பேச்சு!

சென்னை, பிப்.25-

16வது சட்டப்பேரவையின் இறுதி நாளான மே 20 - வெள்ளிக்கிழமை அன்று, முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றியதையொட்டி, சட்டப்பேரவை கட்சிகளின் தலைவர்கள் பேசினர்.

அப்போது பேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர் கு.செல்வப்பெருந்தகை, "முதல்வர் அவர்களுடன் 5 ஆண்டு காலம் சட்டப்பேரவை உறுப்பினராகப் பணியாற்றியதைப் பெருமையாகக் கருதுகிறோம்" என்றும், "தமிழ்நாட்டின் முதல்வராக தளபதி அவர்கள் மீண்டும் வந்து அமருவார்" என்றும் குறிப்பிட்டார்.

சட்டப்பேரவையில் காங்கிரஸ் கட்சியின் கு.செல்வப் பெருந்தகை பேசியதாவது :-

இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க பேரவையில் முதலமைச்சர் அவர்களோடு ஐந்தாண்டுகள் சட்டப்பேரவை உறுப்பினராக பணியாற்றியதில் பெருமைகொள்கிறோம். நான் மட்டும் பெருமைகொள்ளவில்லை. மாண்புமிகு முதலமைச்சரை தமிழ்நாடே பெருமைகொண்டு போற்றிக் கொண்டிருக்கிறது. வரலாறு காணாத திட்டங்கள், மக்கள் கண்டிராத உதவிகள், அது சமூக நலத் உதவி ஆகட்டும், மக்களுடைய ஏற்றத்திற்கான திட்டங்கள் ஆகட்டும், இது வரை தமிழ்நாடு கண்டிராத பல அதிசயங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டு மக்களுக்கு கொடுத்திருக்கிறார். ஏன், இந்தியாவே திரும்பி பார்க்கிறது, உலகமே திரும்பி பார்க்கிறது போன்ற பல திட்டங்களை கொண்டு வந்திருக்கிறார். அந்தத் திட்டங்களை எல்லாம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே அறிவித்திருக்கிறார்கள்.

என்னைக் கவர்ந்த திட்டங்கள் பல திட்டங்கள். ஒருகாலத்தில் வடஇந்தியாவிலிருந்து IAS, IPS அதிகாரிகள் தமிழ்நாட்டில் நிறைய பேர் வருவார்கள் என்று சொல்வார்கள். ஆனால் அதையும் மாற்றியமைத்து ஏழையெளிய மக்கள், சாதாரண விளிம்புநிலை மக்கள் எல்லாம் அந்த இடத்தை, உயரத்தை அடையமுடியும் என்று நான் முதல்வன் திட்டம், புதுமைப் பெண் திட்டம், தமிழ்ப் புதல்வன் திட்டம் மூலமாக அதை நிரூபித்துக் காட்டியவர்.

எனக்கு வரலாற்றிலே இரண்டு பேரைப் பிடிக்கும். ஒன்று கர்ணனைப் பிடிக்கும். இன்னொன்று மருது சகோதரர்களை பிடிக்கும். கர்ணன் என்பவர் வாரி வழங்குபவர், நட்பிற்கு இலக்கணமாக இருப்பவர். அதை இந்த கலியுக காலத்தில் நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் கண்டு பூரிப்படைந்திருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோன்று பெரிய மருது, சின்ன மருது. ஒருகாலத்தில் வெள்ளையர்கள் பெரிய மருது, சின்ன மருது இருவரிடமும் ஒரு கோரிக்கை வைத்தார்கள். உங்களுடைய ஆட்சியைப் பார்த்தும், நேர்மையை பார்த்தும், மக்களுடைய அர்ப்பணிப்பை பார்த்தும் நாங்கள் எல்லாம் வியந்து போயிருக்கிறோம். பிரிட்டிஷார் ஒரு வேண்டுகோள் வைக்கிறார்கள்.

ஊமைத்துரையை நீங்கள் விட்டுவிட்டால் உங்களுக்கு நாங்கள் இந்த நாட்டை கொடுத்துவிடுவோம். உங்களுடைய வீரத்தின்மீது நாங்கள் எல்லாம் மிகப்பெரிய அபிமானிகளாக இருக்கிறோம். அப்போது பெரிய மருது, சின்ன மருது சொன்ன வார்த்தை, நட்புக்கு இலக்கணமாக ஊமைத்துரை எங்களிடம் இருக்கிறார். அவரை நாங்கள் விட்டுக் கொடுத்தாலோ, காட்டிக்கொடுத்து விட்டாலோ வரலாற்றில் மிகப்பெரிய குற்றப் பின்னனியோடு இந்த தமிழகம் இருக்கும். ஆகையால் ஊமைத்துரையை விட்டுக்கொடுக்க முடியாது என்று சொன்னார்.

நான் சொல்வதிலே ஆயிரம் அர்த்தங்கள் இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் புரிந்திருப்பார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், கடைசியில் என்ன ஆனது? நட்புக்காக நாட்டை இழந்தார், உயிரை இழந்தார், வரலாறாக இருக்கிறார். அதையெல்லாம் நான் முதலமைச்சர் அவர்களேடு சிலநேரங்களிலே ஒப்பிட்டுப் பார்ப்பதுண்டு. தமிழ் தேசத்திற்காக, தமிழ் மண்ணிற்காக எவ்வளவு பெரிய எதிரி வந்தாலும், தோழமைக்காகவும், இந்த மக்களுக்காகவும் தலைநிமிர்ந்து தமிழ்நாட்டை வழிநடத்திச் செல்கிறாரே (மேசையைத் தட்டும் ஒலி) அதுதான் இந்த கலியுக காலத்தில் நாங்கள் எல்லாம் இப்படிப்பட்ட முதல்வர் தலைமையிலே பணியாற்றுவதிலே பெருமைப்படுகிறோம்.

அவருடைய காலத்தில் இன்னொரு சிறப்பு. மகாத்மா காந்தி பெயரை தாங்கியுள்ள காந்தியும் இந்த அவையில் இருக்கிறார். பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் பெயரை தாங்கிய நேரு அவர்களும் இந்த அவையிலே இருக்கிறார். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் பெயரை தாங்கிய கருணாநிதியும் இந்த அவையிலே இருக்கிறார்கள். அண்ணாதுரை இருக்கிறார், ராமச்சந்திரன் இருக்கிறார், ஏன் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பெயரை தாங்கிய ஸ்டாலின் அவர்களும் இந்த அவையிலே இருக்கிறார்கள். எங்களுக்கு சின்ன சாமி, பழனிசாமி என்று இருந்தாலும், பெரியசாமியும் எங்கள் முன் இங்கு அமர்ந்திருக்கிறார்.

இதுதான் எங்களுக்கு எல்லாம் பெருமை.

தமிழ்நாட்டை தலைகுனிய வைக்க, காட்டிக் கொடுக்கின்ற ஒரு கூட்டம் எப்பொழுதும் இருக்கும். அவர்களைத்தான் எட்டப்பர் என்று வரலாற்றிலே சொல்வார்கள். ஆனால், அந்த எட்டப்பர்களை எல்லாம் முறியடித்து தமிழ்நாட்டை தலைநிமிர வைத்தத் தலைவர்களும் தமிழ்நாட்டில் வரலாற்றுச் சிறப்புமிக்கத் தலைவர்களாக இருக்கிறார்கள். நாம் பெருமைப்படுகிறோம். ஆனால், உலக வரலாற்றிலே எந்தவித ஆயுதமும் இல்லாமல், எந்தவித எதிர்ப்பும் இல்லாமல் சகிப்புத்தன்மையோடு ஒரு குச்சியை வைத்து இந்தத் தேசத்திற்கு விடுதலை வாங்கிக்கொடுத்த மகாத்மா காந்தியை நாம் படித்திருக்கிறோம். அதேபோன்று, உலக வரலாற்றிலே *Lee Kuan Yew, Fidel Castro, Nelson Mandela* இப்படிப் போன்ற தலைவர்களை எல்லாம் படித்திருக்கிறோம். இந்தத் தலைவர்கள் எல்லாம் என்ன ஒரேயொரு செய்தியைக் கூறுகிறார்கள் என்றால், தன்னுடைய தேசத்தை, தன்னுடைய நாட்டை தலைநிமிரச் செய்ய வேண்டுமென்றால் எந்தவித சமாதானமும் இல்லாமல் ஒரே குறிக்கோள் இந்தத் தேசத்தையும், நாட்டையும் நாம் தலைநிமிரச் செய்ய வேண்டுமென்று படித்திருக்கிறோம். அதைத்தான் முதலமைச்சர் அவர்கள் ஐந்து வருடங்களாக எவ்வளவு பெரிய தாக்குதல் வந்தாலும், எவ்வளவு பெரிய நெருக்கடி வந்தாலும், நெருக்கடி என்றால் சாதாரண நெருக்கடி அல்ல; எந்த நெருக்கடியையும் பொறுத்துக்கொள்ளலாம். நிதி நெருக்கடியைப் பொறுத்துக் கொள்ள முடியாது. அப்படிப்பட்ட நிதி நெருக்கடி கொடுத்தபிறகும், தமிழ்நாட்டு மக்களை தலைகுனிய விடமாட்டேன், தலைநிமிரச் செய்வேன் என்று நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய இந்த அறைக்கூவல்தான் இந்தத் தேசத்தை திரும்பிப் பார்க்க வைக்கிறது.

ஒரு சகோதரர்களாக, இரட்டையர்களாக மருது சகோதரர்கள் போன்று இன்று நாடாளுமன்றத்திலே ராகுல் காந்தி அவர்களும், இந்தத் தமிழ்நாட்டில் இந்த தேசத்தில் முதலமைச்சர் அவர்களும், இந்தத் தேசத்தை பாதுகாப்பதற்கு எந்தவித சமரசமும் செய்யாமல் தொடர்ந்து போராடி வருகிறார்கள். அதை நாங்கள் மிகவும் பூரிப்போடு பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

அதேபோன்று, அம்பேத்கர் பெயரைத் தாங்கிய அம்பேத்குமார் அவர்களும் இங்கு இருக்கிறார் என்று சொல்லியிருக்கிறேன்.

எல்லோரும் இருக்கிறார்கள். நாட்டை காட்டிக்கொடுக்கும் சாமிகளும் இருக்கிறார்கள். இந்த நாட்டை மேம்படுத்த வேண்டிய வீராதி வீரர்களும், சூராதி சூரர்களும் பெரியசாமி அவர்களும் நம்மிடம் இருக்கிறார்கள். எங்களுடைய மாவட்ட அமைச்சர் அவர்களுக்கும், முதலமைச்சர் அவர்களுக்கும், அமைச்சர் பெருமக்களுக்கும், பேரவைத் தலைவர் அவர்களுக்கும், சட்டப் பேரவைச் செயலாளர் மற்றும் சட்டப் பேரவை அலுவலர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சிலநேரங்களில் பேரவைத் தலைவராக மட்டும் நீங்கள் செயல்படவில்லை. ஆசிரியராகவும், குழந்தைகளுக்கு பாடம் எடுப்பதுபோல் எங்களை உட்காருங்கள் என்று உரிமையோடு சொல்வதும், அதையெல்லாம் நாங்கள் ரசித்துக்கொண்டிருக்கிறோம். ஆகவே, இப்படிப்பட்ட பேரவைத் தலைவர் கிடைத்ததில் நாங்கள் பெருமைப்படுகிறோம். தமிழராக, தமிழ் மண்ணைக் காப்பதற்கு தமிழ் நாட்டு பெருமையைக் பாதுகாப்பதற்கு இன்னும் இன்னும் இந்திய தேசம் மட்டுமல்ல, உலக தேசமே தமிழ் நாட்டைப் பேசவேண்டும், பெருமைப்படவேண்டும் என்று முதலமைச்சர் அவர்கள் தொடர்ந்து உழைத்து தியாக தீபமாக வாழ்ந்து கொண்டிருக்கிறாரே அதைக்கண்டு உலகத்தில் புலம்பெயர்ந்த தமிழர்கள் எல்லாம் இன்னும் பூரித்துக்கொண்டிருக்கிறார். ஆகவே எல்லோரும் 200 தொகுதிகள், 200 தொகுதிகள் என்று அடுத்த ஆண்டு என்று சொல்கிறார்கள். நான் சொல்கிறேன் மிகப்பெரிய வரலாற்றை தமிழ்நாட்டில் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் படைக்கப் போகிறார். தமிழ் நாட்டு மக்கள் ஒருபோதும் தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டார்கள். ஒருபக்கம் தமிழ்நாட்டை எல்லா உரிமைகளையும் விட்டுக்கொடுக்க தயாராகி இருக்கின்ற ஒரு கூட்டம் வருகிறது. அது முகமூடி அணிந்து வந்தாலும் சரி, எந்த உருவத்தில் வந்தாலும் சரி, அதை எதிர்கொள்கின்ற ஆளுமையும், திறமையும், நெஞ்சுறுதியும் நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்கு இருக்கிறது என்பதை உணர்ந்திருக்கிறார்கள். ஆகவே, எத்தனையோ குறுக்கு வழியில் என்னென்ன சோதனைகளை மேற்கொள்ளலாம், என்னென்ன இடையூறுகளை ஏற்படுத்தலாம் என்று நினைத்தவர்கள் எல்லாம் இன்று திகைத்துப்போய் உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள்.

முதலமைச்சர் அவர்கள் மீது வைத்துள்ள பற்று, பாசம், உரிமை எல்லாவற்றையும் சேர்த்து வருகின்ற தேர்தலில் அது எதிரொலிக்கப்போகிறது. ஆகவே, இந்த வரலாற்று சிறப்புமிக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் பணியாற்றியதில் ஒரு தமிழனாக, ஒரு கட்சியினுடைய தலைவராக பெருமையடைகிறோம். எங்களுடைய அன்னை சோனியா காந்தி அவர்கள், தலைவர் ராகுல் காந்தி அவர்கள், மல்லிகார்ஜுன் கார்கே அனைவரும் நம்முடைய முதலமைச்சர் அவர்கள்மீது எந்தளவிற்கு நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். அவர் மட்டும் அல்ல; எதிர்க்கட்சி வரிசையில் இருப்பவர்கள்கூட அவர் பெயரைச் சொல்லி பேசும் அளவிற்கு ஓர் ஆளுமையாக இருந்திருக்கிறாரே அந்த ஆளுமையாக வளர்ந்திருப்பதுதான் தமிழ் நாட்டிற்குப் பெருமை! தமிழர்களுக்குப் பெருமை!

ஆகவே, மீண்டும் அடுத்த முறை அங்கு அமர்ந்திருப்பார் முதலமைச்சராக, நாங்களும் அவருடைய வரலாற்றைப் பேசுவோம்; வாழ்த்திப் பேசுவோம். தமிழகம் தலைநிமிரும் என்று சொல்லி இந்த வாய்ப்பளித்த பேரவைத் தலைவர் அவர்களுக்கும், முதலமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்து, விடை பெறுகிறேன்.

இவ்வாறு அவர் பேசினார்.

திருவள்ளூர் தொகுதி கடம்பத்தூர் கிழக்கு ஒன்றியம் மேல்நலத்தூர் ஊராட்சியில் வெல்லும் தமிழ் பெண்கள் ஸ்டாலின் மகளிர் படையினில் பெண்களுக்கான பரப்புரையை திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி.ராஜேந்திரன், வீடு வீடாக சென்று தொடங்கி வைத்தார். உடன் மாவட்ட அவைத் தலைவர் கே.திராவிட பக்தன், ஒன்றிய செயலாளர் க.அரிகிருஷ்ணன், மோ.ரமேஷ், நிர்வாகிகள் சி.ஆர்.குமரன், நந்தகோபால், திலீப்குமார், மோகனசுந்தரம், பி. ஆர். பிரபாகரன் சி.ஆர்.மணிகண்டன், அசோக்குமார், ராம்கி, வசந்தி, மகேஷ் குமார், உள்பட ஒன்றிய நிர்வாகிகள் வெல்லும் தமிழ் பெண்களின் மகளிர் படையினர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்

திருவள்ளூர் மேற்கு மாவட்டம் பள்ளிப்பட்டு மத்திய ஒன்றியம் கார்லம்பாக்கம் மற்றும் குமராஜபேட்டை கிராமத்தில் பயனாளிகளுக்கு அரசு சார்பில் இலவச வீட்டு மனை பட்டாக்களை மேற்கு மாவட்ட கழகச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன், எம்.எல்.ஏ. வழங்கினார் உடன் ஒன்றிய செயலாளர் பி.டி.சந்திரன், வட்டாட்சியி அலுவலர் அற்புதராஜ், வட்டார அலுவலர் விமலா, நிர்வாகிகள் முரளிசேனா, குமரேசன், வி.வி. மணி, செல்வம், நாகராஜ், சின்ன கண், கே. தேவராஜ், மணிகண்டன், சுதாகர்,நேதாஜி, ராஜேந்திரன், ஜெயச்சந்திரன், உள்பட கழக நிர்வாகிகள் உள்ளனர்.

முதலமைச்சர் இளைஞர் விளையாட்டு திருவிழா —

"இது நம்ம ஆட்டம் 2026" மாநில அளவிலான போட்டி!

வெற்றி பெற்றவர்களுக்கு பதக்கங்கள் - பரிசுத் தொகை - காசோலைகள்!

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்!

சென்னை.பிப்.25-

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் (23.2.2026) சென்னை நேரு பூங்கா விளையாட்டு வளாகத்தில் நடைபெற்ற விழாவில் "முதலமைச்சர் இளைஞர் விளையாட்டு திருவிழா - இது நம்ம ஆட்டம் 2026" மாநில அளவிலான போட்டிகளில் வெற்றி பெற்ற அணிகளின் வீரர். வீராங்கனைகளுக்கு பதக்கங்கள் அணிவித்து பரிசுத் தொகை காசோலைகளை வழங்கினார்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழ் நாடு முழுவதும் ஊராட்சி ஒன்றிய அளவில். மாவட்ட அளவில். மாநில அளவிலான முதலமைச்சர் இளைஞர் விளையாட்டு திருவிழா - 'இது நம்ம ஆட்டம் 2026' போட்டிகள் நடத்த மொத்தம் 42.87 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளார்கள்.

இப்போட்டிகளுக்காக ஊராட்சி ஒன்றிய அளவில் வெற்றி பெறுபவர்களுக்கு பரிசு தொகையாக மொத்தம் 16.53 கோடி ரூபாயும். மாவட்ட அளவில் வெற்றி பெறுபவர்களுக்கான பரிசு தொகையாக மொத்தம் 3.73 கோடி ரூபாயும். மாநில அளவில் நடைபெறும் போட்டிகளுக்கு பரிசு தொகையாக மொத்தம் 49.00 லட்சம் ரூபாயும் என மொத்தம் 20.75 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளார்.

அதனடிப்படையில். ஊராட்சி ஒன்றிய அளவிலான. மாவட்ட அளவிலான 'இது நம்ம ஆட்டம் 2026' போட்டிகள் கடந்த 22.1.2026 முதல் 31.1.2026 வரை சிறப்பாக நடைபெற்றன.

இப்போட்டிகளில் ஊராட்சி ஒன்றிய அளவில் தனி நபர் மற்றும் குழுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுத் தொகையாக முதல் இடம் பெற்றவர்களுக்கு தலா 3,000 ரூபாயும். இரண்டாம் இடம் பெற்றவர்களுக்கு தலா 2,000 ரூபாயும். மூன்றாம் இடம் பெற்றவர்களுக்கு தலா 1,000 ரூபாயும் என தமிழ்நாடு முழுவதும் வெற்றி பெற்றவர்களுக்கு பதக்கங்கள் மற்றும் மொத்தம் 16.53 கோடி ரூபாய் பரிசுத் தொகையும் வழங்கப்பட்டன.

ஊராட்சி அளவிலான போட்டிகளில் 2,36,064 விளையாட்டு வீரர். வீராங்கனைகள் பங்கேற்று 82,664 விளையாட்டு வீரர். வீராங்கனைகள் பதக்கம் மற்றும் பரிசுத் தொகை வென்றுள்ளனர்.

மாவட்ட அளவில் தனி நபர் மற்றும் குழுப் போட்டிகளில் பரிசுத் தொகையாக முதல் இடம் பெற்றவர்களுக்கு தலா 6,000 ரூபாயும். இரண்டாம் இடம் பெற்றவர்களுக்கு தலா 4,000 ரூபாயும். மூன்றாம் இடம் பெற்றவர்களுக்கு தலா 2,000 ரூபாயும் என தமிழ்நாடு முழுவதும் வெற்றி பெற்றவர்களுக்கு பதக்கங்கள் மற்றும் மொத்தம் 3.73 கோடி ரூபாய் பரிசுத் தொகையும் வழங்கப்பட்டுள்ளது.

மாவட்ட அளவிலான போட்டிகளில் 32,276 விளையாட்டு வீரர். வீராங்கனைகள் பங்கேற்று. 9,324 விளையாட்டு வீரர். வீராங்கனைகள் பதக்கம் மற்றும் பரிசுத் தொகை வென்றுள்ளனர்.

அதன் தொடர்ச்சியாக மாவட்ட அளவில் முதலிடத்தை பெற்ற பெண்கள் கபடி அணிகள், ஆண்கள் ஸ்டரீட் கிரிக்கெட் அணிகள். இருபாலர்களுக்குமான கயிறு இழுத்தல் அணிகள் கடந்த 21.1.2026 முதல் இன்று 23.1.2026 வரை சென்னை மேயர் ராதாகிருஷ்ணன் ஹாக்கி விளையாட்டரங்கம் மற்றும் நேரு பூங்கா விளையாட்டு வளாகத்தில் மாநில அளவிலான போட்டிகளில் பங்கேற்றார்கள். பங்கேற்ற அனைத்து வீரர். வீராங்கனைகளுக்கும் போக்குவரத்து. தங்குமிடம் மற்றும் உணவு உள்ளிட்ட அடிப்படை வசதிகள் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தால் ஏற்பாடு செய்யப்பட்டது.

மாநில அளவிலான போட்டிகளில் 1,221 விளையாட்டு வீரர். வீராங்கனைகள் பங்கேற்று 99 விளையாட்டு வீரர். வீராங்கனைகள் பதங்கம் வென்றுள்ளனர்.

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இன்று நேரு பூங்கா விளையாட்டு வளாகத்தில் நடைபெற்ற ஆண்கள் மற்றும் பெண்களுக்கான கயிறு இழுத்தல் போட்டிகளை தொடங்கி வைத்து பார்வையிட்டார்.

அதனைத் தொடர்ந்து தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் மாநில அளவிலான போட்டிகளில் பெண்களுக்கான கபடி போட்டியில் முதலிடம் பெற்ற செங்கல்பட்டு மாவட்ட அணியினருக்கு தங்கப்பதக்கம் அணிவித்து மொத்தம் 6.00 லட்சம் ரூபாய் பரிசுத்தொகை மற்றும் சான்றிதழ்களையும். இரண்டாமிடம் பெற்ற திருச்சிராப்பள்ளி மாவட்ட அணியினருக்கு வெள்ளிப் பதக்கம் அணிவித்து மொத்தம் 4.00 லட்சம் பரிசு தொகை மற்றும் சான்றிதழ்களையும். மூன்றாம் பெற்ற கரூர் மாவட்ட அணிக்கு வெண்கலப் பதக்கம் அணிவித்து மொத்தம் 2.00 லட்சம் ரூபாய் பரிசு தொகை மற்றும் சான்றிதழ்களையும் வழங்கினார்.

மேலும் ஆண்களுக்கான கயிறு இழுத்தல் போட்டியில் முதலிடம் பிடித்த திருவண்ணாமலை மாவட்ட அணிக்கு தங்கப்பதக்கம் அணிவித்து மொத்தம் 6.75 லட்சம் ரூபாய் பரிசுத் தொகை மற்றும் சான்றிதழ்களையும். இரண்டாமிடம் பிடித்த ஈரோடு மாவட்ட அணியினருக்கு வெள்ளிப் பதக்கம் அணிவித்து மொத்தம் 4.50 லட்சம் ரூபாய் பரிசு தொகை மற்றும் சான்றிதழ்களையும். மூன்றாமிடம் பிடித்த தஞ்சாவூர் மாவட்ட அணிக்கு தங்கப்பதக்கம் அணிவித்து மொத்தம் 6.75 லட்சம் ரூபாய் தொகை மற்றும் சான்றிதழ்களையும். இரண்டாமிடம் பிடித்த கிருஷ்ணகிரி மாவட்ட அணிக்கு வெள்ளிப் பதக்கம் அணிவித்து மொத்தம் 4.50 லட்சம் ரூபாய் பரிசு தொகை மற்றும் சான்றிதழ்களையும். மூன்றாமிடம் பிடித்த தென்காசி மாவட்ட அணியினருக்கு வெண்கலப் பதக்கம் அணிவித்து மொத்தம் 2.25 லட்சம் ரூபாய் பரிசுத் தொகை மற்றும் சான்றிதழ்களையும் வழங்கினார்.

பெண்களுக்கான கயிறு இழுத்தல் போட்டியில் முதலிடம் பிடித்த பிடித்த தஞ்சாவூர் மாவட்ட அணிக்கு தங்கப்பதக்கம் அணிவித்து மொத்தம் 6.75 லட்சம் ரூபாய் தொகை மற்றும் சான்றிதழ்களையும். இரண்டாமிடம் பிடித்த கிருஷ்ணகிரி மாவட்ட அணிக்கு வெள்ளிப் பதக்கம் அணிவித்து மொத்தம் 4.50 லட்சம் ரூபாய் பரிசு தொகை மற்றும் சான்றிதழ்களையும். மூன்றாமிடம் பிடித்த தென்காசி மாவட்ட அணியினருக்கு வெண்கலப் பதக்கம் அணிவித்து மொத்தம் 2.25 லட்சம் ரூபாய் பரிசுத் தொகை மற்றும் சான்றிதழ்களையும் வழங்கினார்.

மேலும் ஆண்களுக்கான ஸ்டரீட் கிரிக்கெட் போட்டியில் முதலிடம் பிடித்த கன்னியாகுமரி மாவட்ட அணியினருக்கு தங்கப்பதக்கம் அணிவித்து மொத்தம் 5.25 லட்சம் ரூபாய் பரிசுத் தொகை மற்றும் சான்றிதழ்களையும். இரண்டாமிடம் பெற்ற விழுப்புரம் மாவட்ட அணியினருக்கு வெள்ளிப் பதக்கம் அணிவித்து மொத்தம் 3.50 ரூபாய் பரிசுத் தொகை மற்றும் சான்றிதழ்களையும். மூன்றாம் பெற்ற இராமநாதபுரம் மாவட்ட அணியினருக்கு வெண்கலப் பதக்கம் அணிவித்து மொத்தம் 1.75 லட்சம் பரிசு தொகை மற்றும் சான்றிதழ்களையும் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் இந்துசமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு. சென்னை பெருநகர மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா. சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி. இ.பரந்தாமன். அ.வெற்றி அழகன். ஜோசப் சாமுவேல். துணை மேயர் மு.மகேஷ்குமார். இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை முதன்மைச் செயலாளர் சத்யபிரத சாகு. தமிழ்நாடு ஒலிம்பிக் பதக்க இலக்கு திட்ட தலைவர் முனைவர் அதுல்ய மிஸ்ரா. தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி. இ.ஆ.ப., மண்டலக் குழுத் தலைவர்கள். மாமன்ற உறுப்பினர்கள். அரசு அலுவலர்கள். விளையாட்டு வீரர். வீராங்கனைகள் கலந்து கொண்டனர்.

வாணியம்பாடி தொகுதி – ஆலங்காயம் பேரூராட்சி முதல் காவலூர் வரை

ஒருவழிச் சாலை - இருவழிச் சாலையாக மாற்றி அமைக்கப்படும்!

சட்டப்பேரவையில் – அமைச்சர் எ.வ.வேலு அறிவிப்பு!

சென்னை, பிப்.25-

வாணியம்பாடி தொகுதி - ஆலங்காயம் பேரூராட்சி முதல் காவலூர் வரை உள்ள ஒரு வழிச்சாலை இரு வழிச்சாலையாக மாற்றி அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என, சட்டப் பேரவையில் கேள்வி நேரத்தின் போது அமைச்சர் எ.வ.வேலு குறிப்பிட்டார்.



கேள்வி நேரத்தின் போது இது குறித்து நடைபெற்ற விவாதம் வருமாறு:-

கோ.செந்தில் குமார்: வாணியம்பாடி தொகுதி, ஆலங்காயம் பேரூராட்சி முதல் காவலூர் வரை உள்ள ஒருவழிச் சாலையை இருவழிச் சாலையாக மாற்றி அமைக்க அரசு முன்வருமா?

அமைச்சர் எ.வ. வேலு: தாங்கள் ஒரு *ruling*ஐக் கொடுத்திருக்கிறீர்கள். சுருக்கமாகக் கேள்வி கேட்டால், சுருக்கமாக அமைச்சர்கள் பதில் சொல்லுங்கள் என்று நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். நீங்கள் ஆசிரியராக இருந்து, அங்கே வகுப்பறையில் மிகவும் *discipline* ஆக நடத்த வேண்டுமென்று கருதக்கூடிய ஒரு நிலையிலிருந்து தங்களுடைய வாழ்க்கையை நீங்கள் அமைத்துக்கொண்டவர்கள். அதனால், உங்களுடைய அந்தக் கருத்துக்கு, எங்களுக்கு எந்த மாற்று கருத்தும் இல்லை. நாங்களும்கூட திருக்குறளைப் போன்றுதான் எங்களுடைய பதிலைச் சொல்ல வேண்டுமென்று நினைக்கிறோம். ஆனால், சட்டமன்ற உறுப்பினர்கள் நாலாடியாரைப்போல் பதில் இருந்தால், திருப்தியாக இருக்குமென்று அவர்களெல்லாம் கருதுகின்ற காரணத்தினால்தான், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் சற்று விரிவாகப் பதில் சொல்ல வேண்டிய நிலையில் இருக்கிறோம்.

வாணியம்பாடி சட்டமன்ற உறுப்பினர், போளூர், ஜமுனாமரத்தூர், ஆலங்காயம், வாணியம்பாடி சாலையானது திருவண்ணாமலை மற்றும் திருப்பத்தூர் மாவட்டங்களை இணைக்கும் சாலையாகும். இது, 82 கிலோ மீட்டர் நீளம் கொண்ட ஒரு மாநில நெடுஞ்சாலை. இந்தச் சாலையில், 57 கிலோ மீட்டர் நீளம் திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ளது. மீதமுள்ள 27 கிலோ மீட்டர் சாலை, திருப்பத்தூர் மாவட்டத்தைச் சார்ந்த வாணியம்பாடி தொகுதியைச் சார்ந்தது. இதில் 21 கிலோ மீட்டர் இருவழிச் சாலையாக அகலப்படுத்தப்பட்டு, சாலைகள் தற்போது நல்ல நிலையில் இருக்கிறது. மீதமுள்ள 6 கிலோ மீட்டர் சாலை, வனத் துறையின் கட்டுப்பாட்டில் இருக்கிற காரணத்தினால், அதற்கு நாங்கள் *NOC* கேட்டிருக்கிறோம். அந்த மறுப்பில்லா சான்றிதழ் வந்தவுடனேயே, அதற்கு திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, அந்த 6 கிலோ மீட்டர் சாலைப் பணியும் நிறைவு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கோ. செந்தில் குமார்: வாணியம்பாடி நகராட்சி மையப்பகுதியிலுள்ள செட்டியப்பனூர் கூட்டுரோடு முதல் வளையாம்பட்டு வரையிலும், ஏனென்றால் வளையாம்பட்டு முதல் கிறிஸ்தமனூர் ஊராட்சியில் *NHAI* சாலையை அகலப்படுத்தி கொடுத்திருக்கிறோம். அங்கு தேவையை இல்லை. ஆனால், நகர மையப் பகுதியில் கொடுத்தால் பள்ளி, கல்லூரி செல்லும் மாணவர்களும், *RDO office*, நகராட்சி அலுவலகம். . . இருவழிச் சாலையாக மாற்றித் தர வேண்டும்.

அமைச்சர் எ.வ.வேலு: சட்டமன்ற உறுப்பினர் செந்தில் குமார் குறிப்பிட்டதைப்போல் வாணியம்பாடி என்பது வெளி நாட்டினுடைய பொருளாதாரத்தை ஈர்க்கிற ஊர். தோல் தொழிற்சாலைக்கு பெயர் போன ஊர், நிறைய தொழிலாளர்கள் பணியில் இருக்கிறார்கள் என்பதை நான் அறிவேன். காரணம் அது என்னுடைய பழைய பாராளுமன்றத் தொகுதி